# கிராம ஊராட்சிகளில் விரைவில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டிடம்!

## சட்டப் பேரவையில் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பதிலுரை... 5 ஆம் பக்கத் தொடர்ச்சி

முன்பு, நாம் கோவை சென்றபோது தொடங்கியுள்ளோம். இந்தாண்டில் அதற்கான பணிகள் தொடங்கப்படும் என்ற தகவலையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், நம்முடைய தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுத் துறை, Squash World Cup 2023, World Surfing League, HCL Cyclothon, Tamil Nadu Sports Science International Conclave - TASCON போன்ற பல்வேறு நிகழ்வுகளை கடந்த ஓராண்டில் மட்டும் வெற்றிகரமாக நடத்திக்காட்டியுள்ளது.

அடுத்து, இந்தாண்டு டெல்லியில் நடைபெற்ற குடியரசு தின முகாமில் தமிழ்நாடு NCC இயக்குநரகம் ஒட்டுமொத்தமாக மூன்றாம் இடத்தைப் பெற்றது. NSS மற்றும் NCC மாணவர்களை டெல்லியில் நடைபெறுகின்ற குடியரசு தின அணிவகுப்புக்கு விமானத்தில் அழைத்துச் சென்று திரும்ப விமானத்திலேயே அழைத்து வருவோம் என்ற வாக்குறுதியை சென்ற ஆண்டு அறிவித்திருந்தோம். அதனை நிறைவேற்றும் வகையில், அதற்கான ஆணைகள் முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி பிறப்பிக்கப்பட்டன.

அதன்படி, கடந்த குடியரசு தின அணிவகுப்புக்கு நம்முடைய NSS மாணவர்கள் அனைவரும் விமானத்தில் டெல்லி சென்று வந்ததை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.




### தமிழ்நாட்டிற்கு விருதுகள்!

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான கழக அரசு, விளையாட்டு மேம்பாட்டிற்காக எடுத்து வரும் பல்வேறு முன்னெடுப்புகளுக்கு அங்கீகாரங்களும் - பாராட்டுக்களும் குவிந்து வருகின்றன.

அந்த வகையில், Confederation of Indian Industry-CII என்ற அமைப்பின் சார்பாக, "விளையாட்டுக்கான வளர்ச்சியை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலம்" அதாவது Best State for Promoting Sports என்ற அந்த உயரிய விருதை தமிழ்நாட்டிற்கு வழங்கி கௌரவித்தது.

அதே போல, 'தி இந்து' நாளிதழ் நடத்துகின்ற Sports Star பத்திரிகை. Sportstar Aces Award 2023-ல் "விளையாட்டை ஊக்குவிப்பதில் சிறந்த மாநிலம்" எனும் விருது தமிழ்நாடு அரசுக்கு வழங்கப்பட்டது. இதற்கு முன்பு இந்த விருது ஒடிஷா மாநிலத்துக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

### சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை!

திராவிட மாடல் அரசு செயல்படுத்தும் பல்வேறு திட்டங்கள் மற்றும் துறை சார்ந்த பணிகளைக் கண்காணிப்பது மற்றும் ஒருங்கிணைப்பது எனும் தலையாய பணியை, நம்முடைய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை மேற்கொண்டு வருகிறது.

'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' திட்டத்தின்கீழ், ஒவ்வொரு தொகுதியிலிருந்தும் நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்த கோரிக்கைகளில், 11 ஆயிரத்து 200 கோடி ரூபாய் மதிப்பில் 818 பணிகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்த ஆண்டு மட்டும், ரூபாய் 5 ஆயிரம் கோடி மதிப்பிலான 210 பணிகளைச் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

### மாவட்ட அளவிலான கள ஆய்வுகள்!

ஆய்வுகளே தீர்வுகளைத் தரும் என்கிற நம்முடைய முதலமைச்சரின் அறிவுரையின்படி மாவட்ட அளவிலான களப்பணி ஆய்வுகளைத் தொடர்ந்து நடத்தி வருகின்றோம்.

கடந்த ஆண்டு மட்டும் 27 மாவட்டங்களுக்கு, சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அதிகாரிகளுடனும், அந்தந்த மாவட்ட மக்கள் பிரதிநிதிகளுடனும், அரசின் பல்வேறு நலத் திட்டங்கள் குறித்து களப்பணி ஆய்வுகளை மேற்கொண்டோம்.

அதில் வந்த, 495 Remarks தொடர்பாக, சம்பந்தப்பட்ட துறைகளின்மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின் மூலம் நடத்தப்படும் இந்த களப்பணி ஆய்வுக் கூட்டங்களில், அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக எதிர்க் கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களும் பங்கேற்க வேண்டுமென்று தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகின்றோம்.

### வடசென்னை வளர்ச்சித் திட்டம்!

சென்னையின் வளர்ச்சியில் வடசென்னை மக்களின் பங்கு முக்கியமானது. அதன், சமூக பொருளாதார வளர்ச்சியை மனதில் கொண்டு, வட சென்னையின் வளர்ச்சியில் உள்ள இடைவெளியை போக்கிடவும் ரூபாய் 4,000 கோடி மதிப்பீட்டில் வளர்ச்சித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

பல்வேறு துறைகளின்மூலம் நடைபெறும் இப்பணிகளை நம்முடைய சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை ஒருங்கிணைத்து வருகிறது என்பதைப் பெருமையுடன் கூறிக் கொள்கின்றேன்.

வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள முக்கியமான பணிகள் சிலவற்றை மட்டும் இந்த மாமன்றத்தின் வாயிலாக குறிப்பிட விரும்புகிறேன்.

மின்சாரத்துறை சார்பாக ரூபாய் 628 கோடி மதிப்பீட்டில் மேல்நிலை மின் பாதைகளை புதைவடங்கள் - Underground EB Line ஆக மாற்றுவதற்கான திட்டம் விரைவில் தொடங்கப்படவுள்ளது. மேலும், இராயபுரம், கொடுங்கையூர் உள்ளிட்ட இடங்களில் 416 கோடி ரூபாய் மதிப்பீட்டில், 2 ஆயிரத்து 600 வீடுகளைக் கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டப்படும். கொளத்தூர் அரசு புறநகர் மருத்துவமனையில் 54 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கூடுதல் தளங்கள் கட்டப்படவுள்ளன. இப்படி, பல்வேறு முக்கியத் திட்டங்கள் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறையின்மூலமாக செயல்படுத்தப்படவுள்ளன.

### சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் பட்டா வழங்குதல்!

சென்னை மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் குடியிருப்போருக்கு பட்டா பெறுவதில் உள்ள சிக்கல்கள் தொடர்பாக பல்வேறு கோரிக்கைகள் பெறப்பட்டன. எனவே, பட்டா வழங்குவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களை போக்கிட வேண்டும் என்ற முனைப்போடு செயல்பட்டு வருகின்றோம்.

இதற்காக, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் தலைமையில் சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய ஓர் உயர்நிலைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவின் பரிந்துரைகள் முதலமைச்சர் அவர்களுக்கு வழங்கப்பட்டு, பட்டா இல்லாத பொதுமக்களுக்கு பட்டா வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, அடுத்த மாதம் ஐந்தாயிரம் பட்டாக்கள் சம்பந்தப்பட்ட பயனாளிகளுக்கு வழங்க இருக்கின்றோம்.

### தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம்!

கல்வியில் சிறந்த மாநிலமாக உள்ள தமிழ்நாட்டை Skilled work force கொண்ட மாநிலமாகவும் உருவாக்க, முதலமைச்சருடைய கனவுத் திட்டமான, 'நான் முதல்வன் திட்டம்', தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 'நான் முதல்வன் திட்டம்' இன்றைக்கு பல்வேறு சாதனைகளைப் படைத்து வருகின்றது.

'நான் முதல்வன்' திட்டத்தின்மூலம் சென்ற கல்வியாண்டில், 14 லட்சத்து 68 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட வேலைவாய்ப்பு முகாம்களின்மூலம் 87 ஆயிரத்து 712 மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு குறைந்தது 5 இலட்சம் ரூபாய் முதல், 45 இலட்சம் ரூபாய் வரை ஆண்டு சம்பளம், ஊதியம் கிடைக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்திட்டத்தில் திறன் பயிற்சி பெறும் நம் கல்லூரி மாணவர்கள் 25 பேர், 10 நாட்களுக்கு முன்பு, இங்கிலாந்தில் உள்ள துர்ஹாம் (Durham University) பல்கலைக்கழகத்தில், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல் (Artificial Intelligence and Data Science) துறைகளில் திறன் மேம்பாட்டுப் பயிற்சி பெற்றுத் திரும்பியுள்ளனர். அவர்களை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நேரடியாக அழைத்து பாராட்டினார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கின்றேன்.

### இந்தியத் திறன் போட்டி 2024 - Indian Skill Competition - 2024!

சமீபத்தில் நடைபெற்ற இந்தியத் திறன் போட்டியில் தமிழ்நாட்டு மாணவர்கள் 6 தங்கம், 8 வெள்ளி,

## மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு நடப்பாண்டில் 35 ஆயிரம் கோடி வங்கிக் கடன் வழங்க இலக்கு!

9 வெண்கலம் மற்றும் 17 சிறப்புப் பதக்கங்கள் என மொத்தம் 40 பதக்கங்களை வென்று ஒன்றிய அளவில் மூன்றாவது இடத்தைத் தமிழ்நாடு பிடித்தது.

நான் முதல்வன் போட்டித் தேர்வு ஊக்கத்தொகை. தமிழ்நாட்டிலிருந்து அதிக அளவிலான ஒன்றிய அரசு அதிகாரிகளை உருவாக்கிடும் நோக்கத்தில், 'நான் முதல்வன் போட்டித் தேர்வு பிரிவு' உருவாக்கப்பட்டது. இதன்மூலம், அகில இந்திய சிவில் சர்வீசஸ் முதல்நிலைத் தேர்வில் சென்றாண்டு தேர்ச்சி பெற்ற 453 மாணவ, மாணவியருக்கு தலா ரூபாய் 25,000 வீதம் மொத்தம் ரூபாய் 1 கோடியே 13 இலட்சத்து 25 ஆயிரம் ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கண்ட மாணவர்களில் 117 பேர் நேர்முகத் தேர்வுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 39 பேர் தேர்ச்சி பெற்றனர் என்பதையும் மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

2021-2022 ஆம் ஆண்டு தமிழ்நாட்டிலிருந்து 27 பேர் மட்டுமே UPSC தேர்வில் வெற்றிபெற்ற நிலையில், இந்த ஆண்டு 45 பேர் UPSC தேர்வில் வெற்றி பெற்றுள்ளதற்கு, (மேசையைத் தட்டும் ஒலி) நான் முதல்வன் திட்டம் மிக, மிக முக்கிய காரணம்.

இவை மட்டுமின்றி, "உயர்வுக்குப் படி, தமிழ்நாடு உயர் திறன் மேம்பாட்டு மையம், கல்லூரிக் கனவு, Skills on Wheels" போன்ற திட்டங்களையும் நம்முடைய தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் வெற்றிகரமாக செயல்படுத்தி வருகிறது.

**'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' என்றார் பேரறிஞர் அண்ணா. 'ஆணுக்கு நிகர் பெண் என்று முழங்கினார்' முத்தமிழறிஞர் கலைஞர். 'இன்றைக்கு பெண்ணுக்கு நிகர் எவரும் இல்லை' என்று சொல்லும் அளவிற்கு கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் தந்து, (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு மகளிரின் சிரிப்பிலும், அண்ணாவையும், கலைஞரையும், இனமான பேராசிரியரையும், தந்தை பெரியாரையும் கண்டு வருகிறார் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.**

**பேறிஞர் அண்ணாவின் பிறந்த நாளில் - கலைஞர் நூற்றாண்டில் முதலமைச்சர் அவர்களால், கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.**

**1 கோடியே 16 இலட்சம் மகளிருக்கு மாதம் 1,000 ரூபாய் என்று, ஒவ்வொரு மகளிருக்கும் இதுவரை, இந்த 10 மாதங்களில், தலா 10 ஆயிரம் ரூபாய் வீதம், மொத்தம் 11 ஆயிரத்து 323 கோடி ரூபாய் உரிமைத் தொகையாக வழங்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)**

கலைஞர் மகளிர் உரிமைத் தொகை திட்டம், நகரப் பேருந்துகளில் மகளிர், மாற்றுத் திறனாளிகள் மற்றும் திருநங்கைகளுக்கு கட்டணமில்லா விடியல் பயணம், முதலமைச்சருடைய காலை உணவுத் திட்டம், 'புதுமைப் பெண்' திட்டம் என மகளிர் நலனுக்காக அடுக்கடுக்கான திட்டங்களை கழக அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், நம்முடைய துறையும் மகளிர் நலனுக்காக பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது.

மகளிர் சுய உதவிக் குழுக்களின் செயல்பாட்டை ஊக்குவித்திட 2021-2022 முதல் இதுவரை மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு என ரூபாய் 80 ஆயிரத்து 936 கோடி வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. குறிப்பாக, சென்ற நிதியாண்டில், 4 இலட்சத்து 79 ஆயிரத்து 350 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு 30 ஆயிரத்து 75 கோடி ரூபாய் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டது.

> **'நான் முதல்வன்' திட்டத்தின்மூலம் சென்ற கல்வியாண்டில், 14 லட்சத்து 68 ஆயிரம் மாணவர்கள் பயனடைந்துள்ளனர். இத்திட்டத்தின்கீழ் நடத்தப்பட்ட வேலை வாய்ப்பு முகாம்களின்மூலம் 87 ஆயிரத்து 712 மாணவர்கள் வேலைவாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். இவர்களுக்கு குறைந்தது 5 இலட்சம் ரூபாய் முதல், 45 இலட்சம் ரூபாய் வரை ஆண்டு சம்பளம், ஊதியம் கிடைக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.**

அதன் தொடர்ச்சியாக, இந்த நிதியாண்டில் 35 ஆயிரம் கோடி ரூபாய் வங்கிக் கடன் வழங்க நம்முடைய முதலமைச்சர் அவர்களால் எங்களுக்கு இலக்கு நிர்ணயி க்கப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த ஆண்டுகளைப் போலவே இவ்வாண்டும் வங்கிக் கடன் வழங்குவதில் அந்த இலக்கை எட்டுவோம் என்பதை இந்த மாமன்றத்தில் பெருமையோடு தெரிவித்துக்கொள்கிறோம்.

முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான நம்முடைய 'திராவிட மாடல்' அரசு அமைந்தது முதல் தற்போது வரை கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறங்களில் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்கள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

சுழல் நிதி. 2021-2022 முதல் தற்போது வரை 47 ஆயிரம் கிராமப்புற சுய உதவிக் குழுக்களுக்கு ரூபாய் 70 கோடியே 55 இலட்சமும், நகர்ப்புறங்களில் உள்ள சுய உதவிக் குழுக்களுக்கு 49 கோடியே 91 இலட்சம் ரூபாயும் Revolving Fund, சுழல் நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம். பெண்ணாகரம் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினர் ஜி.கே.மணி அவர்கள் அளித்துள்ள வெட்டுத் தீர்மானத்தில், சுய உதவிக் குழுக்களுக்கான வட்டி மானியம் குறித்து கேள்வி எழுப்பி இருந்தார்கள். அதற்குரிய பதிலை இந்த மாமன்றத்தின் வாயிலாக அளிக்க விரும்புகிறேன்.

மகளிர் சுய உதவிக் குழுக்கள் எக்காரணம் கொண்டும் முடங்கிவிடக் கூடாது என்பதற்காக கிராமப் பகுதிகளில் உள்ள மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியம் வழங்கப்பட்டு வருகிறது. 2021-2022 முதல் தற்போது வரை 5 இலட்சத்து 79 ஆயிரத்து 106 மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வட்டி மானியத் தொகையாக 94 கோடியே 4 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் ராஜ்குமார் அவர்கள், அளித்துள்ள வெட்டுத் தீர்மானத்தில் மகளிர் சுய உதவிக் குழு மற்றும் கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடங்களின் செயல்பாடுகள் குறித்து கேள்வி எழுப்பியுள்ளார்கள்.

தமிழ்நாட்டில் உள்ள கிராம ஊராட்சிகளில், 12 ஆயிரத்து 396 கிராம ஊராட்சி சேவை மையக் கட்டடங்களும், 11 ஆயிரத்து 816 சுய உதவிக் குழுக் கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன. இவை அனைத்திலும் சுய உதவிக் குழு கூட்டங்கள், பயிற்சிகள் மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த இரண்டு வகையான கட்டடங்களும் இல்லாத 111 கிராம ஊராட்சிகளில் விரைவில் சுய உதவிக் குழுக்களுக்கான கட்டடங்கள் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)




சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை நகர்ப்புறங்களில் சந்தைப்படுத்தி விற்பனை செய்ய, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் மாவட்டத் தலைமையகங்களில் வணிக வளாகங்களை அமைத்து, அதற்கு 'பூமாலை வணிக வளாகம்' என்று பெயரிட்டார்கள்.

முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்பேரில், தமிழ்நாட்டில் உள்ள பூமாலை வணிக வளாகங்கள் ரூபாய் 5 கோடியே 60 இலட்சம் மதிப்பீட்டில் புனரமைக்கப்பட்டுள்ளன. இன்றைக்கு அந்த வளாகங்களில் நம்முடைய மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புகள் வெற்றிகரமாக விற்பனையாகி வருகின்றன.

அதேபோல, சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களை முறையாக சந்தைப்படுத்த 'மதி' என்ற தனித்துவ முத்திரையுடன் அவை விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. இணையதளம் வாயிலாகவும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருட்களை விற்பனை செய்ய www.mathisandhai.com எனும் இணையதளம் சிறப்புடன் செயல்பட்டு வருகின்றது. மேலும், கிராமப்புறம் மற்றும் மலைப்பகுதிகளில் செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், தாங்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை பல்வேறு இடங்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய தேவையுள்ளது. அதற்காக முதலமைச்சர் அவர்களுடைய அறிவுறுத்தலின்பேரில், 3 கோடியே 20 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 100 'மதி எக்ஸ்பிரஸ்' மின் வாகனங்கள் தமிழ்நாடு முழுவதும் மகளிர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி)

கடந்த செப்டம்பர் மாதம், தருமபுரி மாவட்ட ஆட்சியர் வளாகத்தில், சிறுதானிய உணவு அரங்கத்தினை திறந்து வைத்தோம். அதைத் தொடர்ந்து, இப்பொழுது 32 மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகங்களில் ரூபாய் 2 கோடி மதிப்பீட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுடைய சிறுதானிய சிற்றுண்டி உணவகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. (மேசையைத் தட்டும் ஒலி) மீதமுள்ள மாவட்டங்களிலும் விரைவில் இத்தகைய உணவகங்கள் திறக்கப்படவுள்ளன என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக தெரிவித்துக் கொள்கின்றோம். மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் வங்கிக் கடன் இணைப்பினை, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வெறும் கடன் தொகையாக பார்க்கவில்லை. அதை நம் மகளிரினுடைய உழைப்பின்மீது வைத்துள்ள நம்பிக்கைத் தொகையாகத்தான் பார்க்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நாங்கள் இந்த நேரத்தில் பெருமையோடு தெரிவித்துக் கொள்கின்றோம்.

என்னுடைய இந்தப் பதிலுரையை முடிக்கும் முன்பு, இந்த மன்றத்தில் நான் ஒரு உறுதியைத் தெரிவித்து க்கொள்ள விரும்புகிறேன்.

புகழ்பெற்ற Sapiens - A Brief History of Humankind என்ற நூலினை எழுதிய வரலாற்று ஆய்வாளர் யுவால் நோவா ஹராரி (Yuval Noah Harari), அவரது உரை ஒன்றில், "எப்படி கம்ப்யூட்டரில் algorithm உள்ளதோ, அதே மாதிரி உயிரினங்களுக்கும் algorithm உண்டு" என்று சொன்னார். எப்படி ஒவ்வோர் உயிரினத்துக்கு ள்ளும் ஒரு algorithm இருக்கிறதோ, அதேமாதிரி ஒவ்வோர் இனத்துக்கென்றும் ஒரு algorithm இருக்கும். தமிழ்நாட்டைப் பொறுத்தவரை, நாம் எப்படி Dravidian Model என்று சொல்கிறோமோ, அதே மாதிரி Dravidian Algorithm என்றும் இதனை எடுத்துக் கொள்ளலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த Dravidian Algorithm ஏதோ ஓரிரு நாளில் உருவானதல்ல. இதற்குத் தேவையான அனைத்துத் தகவல்களும், அனுபவங்களும் நீதிக் கட்சி காலத்தில் இருந்து ஏறத்தாழ ஒரு நூற்றாண்டாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

தந்தை பெரியாரின் பகுத்தறிவுக் கொள்கையைப் பிரச்சாரம் செய்ததற்காக அடித்துக் கொல்லப்பட்ட உடையார்பாளையம் வேலாயுதம் தொடங்கி, 'நீட்' தேர்வால் கொல்லப்பட்ட தங்கை அரியலூர் அனிதா வரையிலான அத்தனை உயிரிழப்புகளையும் கண்டதுதான் இந்த Dravidian Algorithm.

நீட் தேர்வு நல்லதா, கெட்டதா என்பதை ஒட்டுமொத்த நாடும் புரிந்துக்கொள்வதற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் புரிந்துக் கொண்டார்கள். இந்தித் திணிப்பை நாம் ஏன் எதிர்க்க வேண்டும் என்று மற்ற மாநிலங்கள் புரிந்துக்கொள்வதற்கு 50 ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்கள் புரிந்துக் கொண்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மற்ற மாநிலங்கள் எல்லாம் சிந்திப்பதற்கு முன்பே கலைஞர் அவர்களால் தமிழ்நாட்டில் பெண்களுக்கு சொத்துரிமை கொடுக்கப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவுக்கே வழிகாட்டுகிற வகையில் காலை உணவுத்திட்டம், விடியல் பயணத் திட்டம் போன்றவற்றை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இப்படி ஒட்டுமொத்த மக்களுக்கும் பயனளிக்கக் கூடிய சமூக நலத் திட்டங்கள் பலவற்றை தமிழ்நாடு என்றைக்கோ நடைமுறைப்படுத்திவிட்டது. இதற்கெல்லாம் காரணம், தந்தை பெரியாரால், பேரறிஞர் அண்ணாவால், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களால் (மேசையைத் தட்டும் ஒலி) ஒவ்வொரு காலகட்டத்திலும் மெருகேற்றப்பட்ட இந்த Dravidian Algorithm தான்.

இன்றைக்கும், எவ்வளவு முயற்சிகள் செய்தாலும், தமிழ்நாடு மதவாதத்தின் பக்கமும் சாதியவாதத்தின் பக்கமும் சாயாமல் நிற்பதற்குக் காரணம் இந்த Dravidian Algorithm தான். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு அரசை எப்படி Dravidian Model வழி நடத்துகிறதோ, அதே மாதிரி தமிழ்நாட்டு மக்களை இந்த Dravidian Algorithm தான் வழி நடத்துகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த Dravidian Algorithm-மின் சூட்சுமங்கள் அறிந்த தலைவராக இன்றைக்கு நம்மிடத்தில் இருப்பவர் நமது முதலமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டில் அவர் தலைமையில் நடக்கும் திராவிட மாடல் ஆட்சி, தமிழ் மக்களின் முன்னேற்றத்துக்காகவே உழைக்கும். அதற்கு நாம் எந்நாளும் துணை நிற்போம் என்கிற உறுதியினை அளித்து, எனக்கு வாய்ப்பளித்த முதலமைச்சர் அவர்கள், பேரவைத் தலைவர் அவர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றியினை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த நேரத்திலும் என்னோடு தோளோடு தோள் நிற்கும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர், அவருடைய துறைக்கு அதிக நிதியொதுக்கீடு செய்தாலும், என்னுடைய துறையின்மீது அதிக அக்கறை வைத்திருக்கக்கூடிய நண்பர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்களுக்கும், தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலாளர் சிவதாஸ் மீனா ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் செயலாளர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் என். முருகானந்தம் ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், முதலமைச்சர் அவர்களுடைய அனைத்து செயலாளர்களுக்கும், தமிழ்நாடு அரசின் நிதித்துறை முதன்மைச் செயலாளர் உதயச்சந்திரன் ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா ஐ.ஏ.ஏஸ் அவர்களுக்கும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் செந்தில்குமார், ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அரசுச் செயலாளர் Dr. டாரேஸ் அகமது, ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி. இன்னொசென்ட் திவ்யா, ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி திவ்யதர்ஷினி, ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் செயலர் மேகநாதரெட்டி, ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், மாநில நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் நிர்வாக இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி. சிங் ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும், சிறப்புத்திட்ட செயலாக்கத் துறையின் துணை செயலாளர் பிரதாப் ஐ.ஏ.எஸ் அவர்களுக்கும் மற்றும் துறை சார்ந்த அனைத்து உயர் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும், முதலமைச்சர் அவர்களின் தனிச் செயலாளர் தினேஷ் அவர்களுக்கும், என்னுடைய உதவியாளர் செந்தில், அரசு நேர்முக உதவியாளர் மணிராஜ், உதவியாளர் மணிகண்டன் ஆகியோருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் அளித்துள்ள வெட்டுத்தீர்மானங்களுக்கு உரிய பதில்களை பதிலுரையிலும் அறிவிப்புகளிலும் வெளியிட்டுள்ளோம். எனவே, அனைத்து வெட்டுத் தீர்மானங்களையும் திரும்பப் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.